## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 3-9 - சொன்னால்
## (மன்னா மனிசரைப் பாடாமல் பரமனைத் துதிக்கும்படி புலவர்க்கு உபதேசித்தல்)

2985 * சொன்னால் விரோதமிது * ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ *
என்னாவில் இன்கவி * யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன் **
தென்னாதெனாவென்று * வண்டு முரல் திருவேங்கடத்து *
என்னானை என்னப்பன் * எம்பெருமான் உளனாகவே 1

2986 உளனாகவே எண்ணித் * தன்னை ஒன்றாகத் தன் செல்வத்தை *
வளனா மதிக்கும் * இம்மானிடத்தைக் கவி பாடி என்? **
குளனார் கழனி சூழ் * கண்ணன் குறுங்குடி மெய்ம்மையே *
உளனாய எந்தையை * எந்தை பெம்மானை ஒழியவே 2

2987 ஒழிவு ஒன்றில்லாத * பல்லூழிதோறூழி நிலாவ * போம்
வழியைத் தரும் * நங்கள் வானவர் ஈசனை நிற்கப் போய் **
கழிய மிக நல்லவான் * கவி கொண்டு புலவீர்காள்! *
இழியக் கருதி * ஓர் மானிடம் பாடல் என்னாவதே? 3

2988 என்னாவது? எத்தனை நாளைக்குப் போதும்? * புலவீர்காள்! *
மன்னா மனிசரைப் * பாடிப் படைக்கும் பெரும் பொருள் **
மின்னார் மணிமுடி * விண்ணவர் தாதையைப் பாடினால் *
தன்னாகவே கொண்டு * சன்மம் செய்யாமையும் கொள்ளுமே 4

2989 கொள்ளும் பயனில்லை * குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை *
வள்ளல் புகழ்ந்து * நும் வாய்மை இழக்கும் புலவீர்காள்! **
கொள்ளக் குறைவிலன் * வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் * என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக் * கவி சொல்ல வம்மினோ 5

2990 வம்மின் புலவீர்! * நும் மெய் வருத்திக் கை செய்து உய்ம்மினோ *
இம்மன்னுலகினில்[1] * செல்வர் இப்போதில்லை நோக்கினோம் **
நும் இன்கவி கொண்டு * நும் நும் இட்டா தெய்வம் ஏத்தினால் *
செம்மின் சுடர்முடி * என் திருமாலுக்குச் சேருமே 6

2991 சேரும் கொடை புகழ் * எல்லையிலானை * ஓராயிரம்
பேரும் உடைய பிரானை அல்லால் * மற்று யான் கிலேன் **
மாரி அனைய கை * மால்வரை ஒக்கும் திண்தோள் என்று *
பாரிலோர் பற்றையைப் * பச்சைப் பசும் பொய்கள் பேசவே 7

2992 வேயின் மலி புரை தோளி * பின்னைக்கு மணாளனை *

---
[1] இம்மன்னுலகில்

ஆய பெரும் புகழ் * எல்லை இலாதன பாடிப் போய் **
காயம் கழித்து * அவன் தாளிணைக் கீழ்ப் புகும் காதலன் *
மாய மனிசரை * என் சொல்ல வல்லேன் என் வாய் கொண்டே? 8

2993 வாய் கொண்டு மானிடம் பாட வந்த * கவியேன் அல்லேன் *
ஆய் கொண்ட சீர் வள்ளல் * ஆழிப்பிரான் எனக்கே உளன் **
சாய் கொண்ட இம்மையும் சாதித்து * வானவர் நாட்டையும் *
நீ கண்டு கொள் என்று * வீடும் தரும் நின்று நின்றே 9

2994 நின்று நின்று பல நாள் உய்க்கும் * இவ்வுடல் நீங்கிப் போய் *
சென்று சென்றாகிலும் கண்டு * சன்மம் கழிப்பான் எண்ணி **
ஒன்றியொன்றி உலகம் படைத்தான் * கவி ஆயினேற்கு *
என்றும் என்றும் இனி * மற்றொருவர் கவி ஏற்குமே? 10

2995 * ஏற்கும் பெரும் புகழ் * வானவர் ஈசன் கண்ணன் தனக்கு *
ஏற்கும் பெரும் புகழ் * வண்குருகூர்ச் சடகோபன் சொல் **
ஏற்கும் பெரும் புகழ் * ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து *
ஏற்கும் பெரும் புகழ் * சொல்ல வல்லார்க்கு இல்லை சன்மமே 11

**அடிவரவு:** சொன்னால் உளன் ஒழிவு என்னாவது கொள்ளும் வம்மின் சேரும் வேயின் வாய் நின்று ஏற்கும் சன்மம்